# மஹர பிரதேச சபை
# கம்பஹா மாவட்டம்

## 1 நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2012 மார்ச் 28 ஆம் திகதியும் முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2011 ஏப்ரல் 04 ஆம் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதி அறிக்கை 2013 பெப்ரவரி 05 ஆம் திகதி சபைத் தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

### 1.2 அபிப்பிராயம்

தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்ட எனது அறிக்கையில் காண்பிக்கப்பட்ட கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் காரணமாக கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டுள்ள மஹர பிரதேச சபையின் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்க முடியாதுள்ளேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

(அ) 2003 ஆம் ஆண்டின் போது சபைக்கு ஒப்படைக்கப்பட்ட 4 ஏக்கர் 1 ரூட் 8.26 பேர்ச் உடைய 09 காணித் துண்டுகளின் பெறுமதி மதிப்பிடப்பட்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) இருப்பு மெய்மையாய்வின்றி கணக்கிடப்பட்டிருந்த ரூபா 3,734,298 தொகை மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான இருப்பு, இருப்புப் புத்தகங்களின் மீதியைக் கணிப்பிட்டு பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(இ) மீளாய்வாண்டின் திரண்ட செலவினங்களான ரூபா 1,478,946 கணக்குகளில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

அவசியமான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 91,546,354 கூட்டுத்தொகையான கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின் போது திருப்திகரமாகச் சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது.

### 1.3.3 தொங்கல் கணக்கு

2007 ஆம் ஆண்டு முதல் முன்கொண்டுவரப்பட்ட தொங்கல் கணக்குகளின் ரூபா 45,570 தொகையான வரவு மீதி தீர்க்கப்படுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 பெறவேண்டிய கணக்குகள்

(அ) 10 பெறவேண்டிய (கடன்பட்டோர்) மீதி கணக்குகளுக்காக ரூபா 3,036,278 கூட்டுத்தொகையான பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ஒரு வருடத்திற்கு மேலான காலத்தில் இருந்து முன்கொண்டுவரப்படுகின்ற உத்தியோகத்தர்கள்/ 26 ஊழியர்களின் நிலுவை ஊழியர் கடன் ரூபா 173,469 ஆகக் காணப்பட்டது.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2011 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 34,625,413 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 32,429,299 ஆக இருந்தது.

## 2.2 வருமான நிர்வாகம்

### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மதிப்பீட்டு வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் பற்றிய தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| | வருமான விடயம் | மதிப்பீடு | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|---|
| | | ரூபா '000 | ரூபா'000 | ரூபா '000 |
| (i) | வீதவரியும் வரியும் | 8,225 | 6,929 | 9,618 |
| (ii) | குத்தகை வாடகை | 1,501 | 1,210 | 416 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 4,394 | 765 | 153 |
| (iv) | ஏனைய வருமானங்கள் | 2,231 | 3,264 | 1,659 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

நிலுவையான வீதவரி ரூபா 9,618,256 ஆகக் காணப்பட்டதுடன் மஹர மற்றும் நாரங்வல உப அலுவலக அதிகாரப் பிரதேசத்தில் ரூபா 10,000 இற்கு மேலான மீதிகள் முறையே ரூபா 1,101,310 ஆகவும் ரூபா 355,962 ஆகவும் காணப்பட்டது. இம் மீதிகளில் சில 01 வருடத்திலிருந்து 15 வருடங்கள் வரையான காலப்பகுதியின் போது நிலுவையாகக் காணப்பட்டன. எவ்வாறெனினும், 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச்சட்டத்தின் 159(1) ஆம் பிரிவின் பிரகாரம் சட்ட நடவடிக்கைகளின் மூலம் அறவிடப்படுவதற்கு சபை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

பின்வரும் கட்டுப்பாட்டுப் பகுதிகள் தொடர்பாக விசேட கவனம் கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) வருமான நிர்வாகம்

(இ) உள்ளகக் கணக்காய்வு

(ஈ) சொத்துக்கள் முகாமைத்துவம்